1972 ஆகஸ்ட் 25]

ஊராட்சிகளில் பாலர் பள்ளிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72-இல் பாலர் பள்ளிகளை ஏற்படுத்திய ஊராட்சிகள் யாவை?

(இ) இப்பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Children affected by "Asthma".

* 256 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number of cases of "Asthma" detected in children at the Children's Hospital at Egmore, Madras, during 1970–71 and 1971–72; and

(b) the steps taken to check this infection?

குழந்தைகளுக்கு "ஆஸ்துமா" நோய்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் சென்னை எழும்பூரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் எத்தனை குழந்தைகளுக்கு "ஆஸ்துமா" நோய் பற்றியுள்ளதெனக் கண்டறியப்பட்டது?

(இ) இவ்வாறு கண்டறிந்த நோய்த் தொற்றினைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ).—

ஆண்டு.	அகப் பிணி யாளர்கள்.	புறப் பிணி யாளர்கள்.
(1)	(2)	(3)
1—4—1970 முதல் 31—3—1971 வரை ..	75	5,837
1—4—1971 முதல் 31—3—1972 வரை ..	101	8,715

(இ) சுற்றுப்புறங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்ளல், ஊட்டக் குறைவை ஈடுசெய்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் நோய் பரவுவது குறைக்கப்படுகிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்த ஆஸ்துமா நோய் தொத்து நோயா, தொத்து நோய் அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு வகையில் இது 'இன்பெக்ஷனை' த்தான் காணப்படுகிறது. இது எந்த வகையான இன் என்று தெரியவில்லை. இன்பெக்ஷன் என்றால், அது தொத்துகிற நோய் தான். அதற்குக் காரணம் சில ஈக்கள், கொசுக்கள் மூலமாகவும் வேறுவிதமான கிருமிகள் மூலமாகவும் வருகிறது. ஆஸ்துமாவில் பல வகை இருக்கிறது. சில வகை சிகிச்சையால் குறைகிறது. மற்ற சிலவகை கடுமையான சிகிச்சைக்குப் பின்னரும் குணமடையாத ஆஸ்துமாவாக யிருக்கிறது.

Indian Medicine Central Council Act, 1970.

* 257 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any communication has been received by the Government from the Government of India regarding bringing into force the Indian Medicine Central Council Act, 1970 in the State; and

(*b*) if so, the details of the communication and the reaction of the Government in the matter?

1970-ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மத்தியக் குழுச் சட்டம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டு இந்திய மருத்துவ மத்தியக் குழுச் சட்டத்தை இம்மாநிலத்தில் செயல்படுத்துவது குறித்து இந்திய அரசிடமிருந்து இம்மாநில அரசுக்குக் கடிதம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அந்தக் கடிதத்தின் விவரங்கள் யாவை ? அது குறித்து இவ்வரசின் கருத்து யாது ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : (*a*) Yes.

(*b*) The Government of India have issued a notification bringing into force the provisions of sections 2, 13, 32, 33, 34, 35 and 36 of theIndigenous Medicine Central Council Act, 1970 in the whole of India, and those of sections 3, 5 to 12 (both inclusive), 14 to 16 (both inclusive) also of the said Act in all States except the State of Nagaland, and in the Urban Territory